ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2470/25 - 2026 ජනවාරි මස 07 වැනි බදාදා - 2026.01.07

2470/25 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாண மாகாண சபை

### மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பு

திருத்த இலக்கம் - 05

2014, யூன் 30 ஆம் திகதிய 1869/4 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு பின்வரும் திருத்தங்களை மேற்கொள்வதற்கு மத்திய மாகாண கௌரவ ஆளுநர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்.

பந்தி 07 கீழ்வருமாறு பதிலீடு செய்யப்படுகின்றது.

**7.2.2.1 கல்வித் தகைமைகள்**

அ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில், மொழி (சிங்களம் / தமிழ் /ஆங்கிலம்) மற்றும் கணிதம் அடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல் அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அதற்கு சமமானதாக அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை ஒன்றில் அதற்கு சமமான பாடத்தேர்ச்சியுடன் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

[கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டிய மொழியாக கருதப்படுவது விண்ணப்பதாரர் ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலமாகும்.]

அத்துடன்

(ஆ) கல்விப்பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் (பொதுச் சாதாரண பரீட்சை தவிர) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் (பழைய பாடத்திட்டத்தின் கீழ் மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில்



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

சித்தியடைந்திருத்தல் போதுமானது.) அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அதற்கு சமமானதாக அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை ஒன்றில் அதற்கு சமமான பாடத்தேர்ச்சியுடன் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

கீழ் குறிப்பிட்டுள்ள உபபிரிவுகள் உள்ளீர்க்கப்பட்டுள்ளதுடன் ஏனைய விடயங்கள் மாற்றமடையாமல் அவ்வாறே தொடர்ந்திருக்கும்.

10.1.2. பதவி உயர்வுப் பரீட்சையில் சித்தி பெறுபவர்களை தரம் III இலிருந்து தரம் II இற்கு பதவி உயர்த்தல்

(i) பதவி உயர்வுப் பரீட்சைக்கான தகைமைகளை பரிசீலிக்கும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக தரம் III இல் குறைந்த பட்சம் 03 வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் 03 சம்பள ஏற்றங்களை உழைத்துப் பெற்றவர்கள் சேவையில் நிரந்தரமாக்குவதற்கு வேறு முறையில் தகுதியற்றவர்களாக இல்லாத உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு/ தோற்றுவதற்கு வாய்ப்பு உள்ளதுடன் பதவியுயர்வு பெற்றுக் கொள்வதற்கு இப்பரீட்சையில் சித்தியடையதற்கு மேலதிகமாக பந்தி 10.1.2.1 இன் கீழ் குறிப்பிட்டுள்ள தகைமைகளை பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமாகும்.

10.1.2.1 பூர்த்திசெய்ய வேண்டிய தகைமைகள்

(i) நியமனம் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்

(ii) சேவை வகையின் III ஆம் தரத்தில் குறைந்த பட்சம் ஐந்து (05) வருடங்கள் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் ஐந்து (05) சம்பள ஏற்றங்களை உழைத்துப் பெற்றிருத்தல்

(iii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுச் செயலொழுங்கிற்கு இணங்க பதவியுயர்வு பெறும் தினத்திற்கு முன்னரான ஐந்து (05) வருட காலத்தினுள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனை விட உயர்ந்த செயலாற்றுகையினை வெளிப்படுத்தியிருத்தல்

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிராதிருத்தல்

(v) உரிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

(vi) ஏனைய அரச கரும மொழியில் உரிய நட்டத்தில் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல்.

(vii) இணைப்பு 12 இல் குறிப்பிட்டுள்ள தரம் II இற்கான பதவியுர்வுப் பரீட்சையில் சித்தியடைந் திருத்தல்

குறிப்பு :

1. பதவியுயர்வுப் பரீட்சைத் தொடர்பான தகவல்கள் மற்றும் பாடத்திட்டம் இணைப்பு 12 இல் தரப்பட்டுள்ளன.

2. உரிய பதவியுயர்வுப் பரீட்சையினை முதலாவது மற்றும் இரண்டாவது தொடர்ச்சியான அமர்வுகளில் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்கள் தரம் III இல் ஐந்து (05) வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்யும் திகதியிலிருந்து தரம் II இற்கு பதவியுயர்த்தப்படுவர்.

3. தரம் II இற்கான பதவியுயர்வுப் பரீட்சையினை மூன்றாவது அமர்வில் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்கள் தரம் III இல் ஐந்து (05) வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்யும் திகதி அல்லது பதவியுயர்வுப் பரீட்சையில் சித்தியடையும் திகதி ஆகிய இரு திகதிகளில் பின்னர் வரும் திகதியிலிருந்து தரம் II இற்கு பதவியுயர்த்தப்படுவர்.

4. இப்பரீட்சைக்கு தொடர்ச்சியான மூன்று (03) முறைகள் மாத்திரமே தோற்றுவதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படும்.

இடைக்கால ஏற்பாடுகளின் கீழ் 15:4 மற்றும் 15:5 ஆகிய இரு புதிய பிரிவுகளும் அதன் உப பிரிவுகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

15.4 2012.12.22 ஆம் திகதியன்று நடைபெற்ற மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை ஆட்சேர்ப்புப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மற்றும் அத்திகதிக்குப் பின்னர் சேவையில் இணைந்த, இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் திருத்தம் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் நடைபெறும் தரம் II இற்கான பதவியுயர்வுப் பரீட்சையில் சித்தியடையும் உத்தியோகத்தர்கள் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு தரம் II க்கு பதவி உயர்த்தப்படுவர்.

(i) தரம் II இற்கான பதவியுயர்வுப் பரீட்சையில் முதலாவது மற்றும் இரண்டாவது தொடர்ச்சியான அமர்வுகளில் சித்தியடையும் உத்தியோகத்தர்கள், பிரிவு 10.1.2.1 இல் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின், பதவியுயர்வுப் பரீட்சையில் சித்தியடையும் திகதி அல்லது தரம் III இல் ஐந்து (05) வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்யும் திகதி ஆகிய இரு திகதிகளில் பின்னர் வரும் திகதியிலிருந்து தரம் II இற்கு பதவியுயர்த்தப்படுவர். இவ்வுத்தியோகத்தர்கள் பதவியுயர்வுப் பரீட்சையில் சித்தியடையும் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தியுள்ள தரம் III இல் ஐந்து (05) வருடங்களிற்கு மேலதிகமான முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலம் பதவியுயர்வு விடயங்களுக்கான தரம் II இன் சேவைக் காலமாக கருதப்படும்.

(ii) தரம் II இற்கான பதவியுயர்வுப் பரீட்சையில் மூன்றாவது சந்தர்ப்பத்தில் சித்தியடையும் உத்தியோகத்தர்கள், தரம் III இல் ஐந்து (05) வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்யும் திகதி அல்லது பதவியுயர்வுப் பரீட்சையில் சித்தியடையும் திகதி ஆகிய இரு திகதிகளில் பின்னர் வரும் திகதியிலிருந்து தரம் II இற்கு பதவியுயர்த்தப்படுவர்.

15.5 2007.01.01 ஆம் திகதிக்கு முன்னர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மற்றும் 2007.01.01 ஆம் திகதி முதல் 2013.04.01 ஆம் திகதி வரையான (அதாவது 2006.01.21 ஆம் திகதி முதல் 2010.10.23 ஆம் திகதி வரையான பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில்) ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் திருத்தம் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் முதற் தடவையாக நடைபெறும் தரம் II இற்கான பதவியுயர்த்தும் தொடர்ச்சியான பரீட்சை சந்தர்ப்பங்கள் மூன்றிற்கு (03) மாத்திரம் (முன்னைய சேவை பிரமாணக் குறிப்பின் கீழ் கிடைக்கப்பெற்ற பரீட்சை சந்தர்ப்பங்கள் உள்ளடங்களாக) தோற்ற முடியும். அப்பதவியுயர்வுப் பரீட்சையில் சித்தியடையும், தரம் II இலுள்ள உத்தியோகத்தர்கள் தரம் I க்கு கீழ் குறிப்பிட்டுள்ளவாறு பதவி உயர்த்தப்படுவர்.

(i) பதவியுயர்வுப் பரீட்சையில் (முன்னைய சேவை பிரமாணக் குறிப்பின் கீழ் கிடைக்கப்பெற்ற பரீட்சை சந்தர்ப்பங்கள் உள்ளடங்களாக) சித்தியடையும் உத்தியோகத்தர்கள், பிரிவு 10.2.1.1 இல் குப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின், பதவியுயர்வுப் பரீட்சை நடைபெற்ற திகதி அல்லது தரம் II இல் ஐந்து (05) வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்யும் திகதி ஆகிய இரு திகதிகளில் பின்னர் வரும் திகதியிலிருந்து தரம் I இற்கு பதவியுயர்த்தப்படுவர். இவ்வுத்தியோகத்தர்கள் பதவியுயர்வுப் பரீட்சையில் சித்தியடையும் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தியுள்ள ஐந்து (05) வருடங்களிற்கு மேலதிகமான முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலமும் உள்ளடங்களாக மொத்த சேவைக் காலம் பதினைந்து (15) வருடங்களுக்கு மேலதிகமான முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலம் பதவியுயர்வு விடயங்களுக்காக தரம் I இன் சேவைக் காலமாக கருதப்படும்.

கீழ் தரப்பட்டுள்ள புதிய இணைப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது

இணைப்பு 12 :

மத்திய மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இலுள்ள உத்தியோகத்தர்களை தரம் II இற்கு பதவியுயர்த்துவதற்கான பரீட்சைத் தொடர்பான விதிமுறைகள் மற்றும் பரிந்துரைப் பத்திரம்

01. பரீட்சை பற்றிய விபரம்

| வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|
| 1. தாபன நடைமுறைகள் மற்றும் நடைமுறை விதிகள் | 2 மணித்தியாலங்கள் | 100 |
| 2. நிதி முறைமைகள் | 2 மணித்தியாலங்கள் | 100 |
| 3. பொது வினாத்தாள் | 1 1/2 மணித்தியாலங்கள் | 100 |

குறிப்பு

(i) அனைத்து விடைத்தாள்களிலும் தெளிவற்ற கையெழுத்துக்கள் மற்றும் இலக்கணத் தவறுகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும். வாசிக்க முடியாதவாறு அமையும் எழுத்துக்கள் எழுதப்பட்டிருப்பின் அப்பரீட்சார்த்திகள் தகைமையற்றவர்களாக கருதப்படும்.

(ii) சேவையில் இணைவதற்கான போட்டிப் பரீட்சையில் தாம் தோற்றிய மொழி மூலத்திலே விண்ணப்பதாரிகள் இவ்வினாத்தாள்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

(iii) இப்போட்டிப் பரீட்சையில் சித்தியடைவதற்காக விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்த பட்சம் நாற்பது

சத வீதமான (40%) புள்ளிகள் மற்றும் மூன்று (03) பாடங்களுக்குமான மொத்த புள்ளிகள் 130 இற்கு குறையாமலும் ஒரே பரீட்சையிலேயே (ஒரே அமர்வில்) பெற்றுக் கொள்ள வேண்டும்.

02. நடாத்தும் அதிகாரி :

மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு அல்லது மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் வேண்டுதலுக்கு இணங்க பரீட்சைகள் ஆணையாளர் நாயகம். அல்லது நியமன அதிகாரியினால் பரிந்துரைக்கப்படும் வேறு யாதேனும் நிறுவனம்

03. பரீட்சைக்கான பாடத்திட்டம்

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| 1. தாபன நடைமுறைகள் மற்றும் நடைமுறை விதிகள் | அலுவலக முறைமை தொடர்பான அடிப்படை அவற்றின் முக்கியத்துவம், எழுத்து மூலமான தொடர்பாடல், ஆவணங்களைக் கோவைப்படுத்தல் மற்றும் மாதிரிப்படிவங்களைத் தயாரித்தல் போன்ற துறைகளை உள்ளடக்கிய வகையில் அரசாங்க அலுவகங்களில் பயன்பாட்டிலுள்ள அலுவலக முறைகள் பற்றிய அறிவு, மற்றும் அலுவலகச் செயற்பாடுகளின் போது பெற்றுக் கொண்ட அனுபவத் தேர்ச்சி என்பவற்றைப் பரீட்சிப்பது இவ்வினாப்பத்திரத்தின் நோக்கமாகும்.<br>அரச சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் தொகுதி 1 மற்றும் தாபன விதிக்கோவையின் தொகுதி 1 என்பவற்றில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பான அறிவினைப் பரீட்சிக்கும் பகுதியினையும் இவ்வினாப்பத்திரம் உள்ளடக்கியிருக்கும். |
| 2. நிதி முறைமைகள் | (அ) பகுதி I - கூட்டல் மற்றும் கழித்தல் பயிற்சிகள் (25 புள்ளிகள்) (கூட்டல் மற்றும் கழித்தல் பயிற்சிகளுக்காக கணிப்பானை (கல்குலேட்டர்) பாவிக்க முடியாது. காலம் 15 நிமிடங்கள் மாத்திரம்)<br>(ஆ) பகுதி II - அரசாங்கத் திணைக்களங்களிலும் அமைச்சுக்களிலும் பயன்பாட்டிலுள்ள நிதிக் கட்டுப்பாடு, நிதிப் பொறுப்புக்கள், வருமானங்களும் கொடுப்பனவுகளும், வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, வழங்கல் வேலைகள் மற்றும் சேவைகள் ஆகிய விடயங்கள் தொடர்பான அறிவும் விளக்கமும் பரீட்சித்தல் (50 புள்ளிகள்)<br>(இ) பகுதி III - தொகை மதிப்பீடு மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பான அடிப்படை விடயங்கள் (25 புள்ளிகள்) |
| 3. பொது வினாத்தாள் | இவ்வினாப்பத்திரம் 02 பகுதிகளைக் கொண்டது.<br>(அ) யாதேனும் ஒரு கூற்று அல்லது கலந்துரையாடலின் குறிப்பொன்றினை வாசித்து விளங்கி கடிதம் மற்றும்/ அல்லது அறிக்கை ஒன்றை தயாரித்தல்.<br>(ஆ) சமகால சமூக நடைமுறைகள் தொடர்பில் விளங்கி அதனை விளக்கும் ஆற்றலினைப் பரீட்சித்தல். |

பாடத்திட்டம் மற்றும் விண்ணப்பிக்கும் முறை பற்றிய முழுமையான விபரங்களினை அறிந்துகொள்வதற்கு மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தல்கள் தொடர்பில் பரீட்சார்த்திகள் கவனம் செலுத்தல் வேண்டும்.

கே.கே.ஜி.ஐ.டி.பீ. விஜேதிலக,
செயலாளர்,
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
மத்திய மாகாண சபை.

மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
இல 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி,
2025, திசெம்பர் மாதம் 09 ஆம் திகதி.

EOG 01 - 0058

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.